**கமத்தொழில், கால்நடை வளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

# நெல் சந்தைப்படுத்தும் சபை

## பதவி வெற்றிடங்கள்

நெல் சந்தைப்படுத்தும் சபையில் நிலவும் பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) பதவிகளுக்காக பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பொது முகாமையாளர் - (MM 2-1) - 01 பதவி

**(அ) வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்**

**தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் எந்தவொரு பாடத்தின் கீழும் பெற்றுக்கொண்ட பட்டமொன்று.

அத்துடன்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீக்கரிப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் எந்தப் பாடத்தின் கீழ் அல்லது பெற்றுக்கொண்ட இளமாணி / முதுமாணி மட்டத்திற்குக் குறையாத பட்டப் பின்படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

**அனுபவம்**

அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ'' மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினெட்டு (18) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல். (இந்த 18 வருட காலத்தில் குறைந்தபட்சம் 05 வருடகாலம் பட்டப் பின்படிப்பு பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னராக இருக்க வேண்டும்)

**ஏனைய தகைமைகள்**

- ஆங்கில மொழி தொடர்பில் சிறந்த பரிச்சயம் மற்றும் கணனியில் தேர்ச்சித் தன்மை
- நிர்வாகம், முகாமைத்துவம், கணக்கியல், சந்தைப்படுத்தல் மேம்பாடு மற்றும் விளம்பரம் போன்ற விடயங்கள் தொடர்பான அறிவு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

**(ஆ) வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்**

**தகைமை**

வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**அனுபவம்**

நெல் சந்தைப்படுத்தல் சபையில் பிரதிப் பொது முகாமையாளர் பதவியொன்றில் ஐந்து (05) வருடகால அனுபவத்தைக் கொண்ட அதிகாரியாகவிருத்தல்.

**கட்டாயத் தகைமை**

தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கு சேவைக் காலத்தினுள் சகல சம்பள உயர்வுகளை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்தக் காலத்தினுள் ஒழுக்காற்று தண்டனைகளைப் பெற்றிருக்கக் கூடாது.

**(இ) சம்பள முறை:**

HM 2-1 - 2025 ரூபா (161,140 - 12x4,850 – 219,340)

(2025-03-25ஆம் திகதிய 1/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2026ஆம் வருடத்திற்கு இயைபான சம்பள அளவில் அமர்த்தப்படுவர்.)

**(ஈ) வயதெல்லை:**

35 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**(உ) ஏனைய தகைமைகள்**

- ஆங்கில மொழி தொடர்பில் சிறந்த பரிச்சயம் மற்றும் கணனியில் தேர்ச்சித் தன்மை
- நிர்வாகம், முகாமைத்துவம், கணக்கியல், சந்தைப்படுத்தல் மேம்பாடு மற்றும் விளம்பரம் போன்ற விடயங்கள் தொடர்பான அறிவு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

### பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) - (HM 1-1) - 01 பதவி

**(அ) வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்**

**தகைமைகள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணக்கியல், நிதி முகாமைத்துவம் / அரச நிர்வாகம் மற்றும் நிதி / வியாபார நிர்வாகம் / முகாமைத்துவம் அல்லது சட்டம் தொடர்பான ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல்

   அல்லது

   பட்டய கணக்காளர் நிறுவனமொன்றில் இடைநிலை / கிரயம் மற்றும் முகாமைத்துவம் / கணக்காளர் IIIஆம் நிலையைப் பூர்த்தி செய்திருத்தல்.

   மற்றும்

   கணக்கியல், நிதி முகாமைத்துவம் போன்ற துறைகளுடன் தொடர்புடைய பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

**அனுபவம்**

அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் ''நிறைவேற்றுத்தர'' மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதவிக்கு இயைபான துறையில் பதினைந்து (15) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.(இந்த 15 வருட காலத்தில் குறைந்தபட்சம் 03 வருட காலம் பட்டப்பின்படிப்பு பட்டத்தை பெற்றுக்கொண்ட பின்னராக இருக்க வேண்டும்.

**(ஆ) உள்வாரி விண்ணப்பதார்களை ஆட்சேர்த்தல்**

**தகைமைகள்**

(i) ''முகாமைத்துவ'' (MM 1-1) சேவை வகுதியில் 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகாலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

(ii) கட்டாயத் தகைமை:

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் சேவைக் காலத்தினுள் சகல சம்பள உயர்வுகளையும் நிர்ணயிக்கப்பட்ட தினத்தில் பெற்றிருக்க வேண்டும் என்பதுடன் அந்தக் காலப்பகுதியினுள் ஒழுக்காற்று தண்டனைகளை பெற்றிருக்கக் கூடாது.

**(இ) சம்பள முறை:**

HM 1-1 - 2025 ரூபா (140,640 - 15x4,100 - 202,140)

(2025-03-25ஆம் திகதிய 1/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2026ஆம் வருடத்திற்கு இயைபான சம்பள அளவில் அமர்த்தப்படுவர்.)

**(ஈ) வயதெல்லை:**

35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**(உ) ஏனைய தகைமைகள்**

- ஆங்கில மொழி தொடர்பில் சிறந்த பரிச்சயம் மற்றும் கணனியில் தேர்ச்சித் தன்மை
- நிர்வாகம், முகாமைத்துவம், கணக்கியல், சந்தைப்படுத்தல் மேம்பாடு மற்றும் விளம்பரம் போன்ற விடயங்கள் தொடர்பான அறிவு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

**பொதுவான விடயங்கள்**

- இலங்கைப் பிரஜையாகவிருக்க வேண்டும்.
- பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- சிறந்த நடத்தையுடையவராக இருக்க வேண்டும்.
- இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரித்து சகிதம்.
- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தில் பதவிக்கு விண்ணப்பிக்கும் பொருட்டு தேவையான தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- தற்போது அரச நிறுவனமொன்றில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர் நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
- சுய தரவு தகவல்களை உள்ளடக்கி தம்மால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை நிரூபிக்கும் ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் சகிதம் உறவினரல்லாத இருவரின் தகவல்களை உள்ளடக்கி 2026-07-15ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் / அல்லது எழுத்து மூலமான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய ஆட்சேர்ப்பு இடம்பெறும்.
- நியமனம் தொடர்பில் அழுத்தங்களைப் பிரயோகித்தல் / பொய்யான தகவல்களை வழங்குதல் தகைமையீனத்துக்கு காரணமாகும்.
- நியமனம் தொடர்பான இறுதித் தீர்மானத்தை நெல் சந்தைப்படுத்தல் சபையின் பணிப்பாளர் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**நெல் சந்தைப்படுத்தல் சபை,**
**வீடமைப்பு பொதுச் செயலகக் கட்டிடம், 6ஆம் மாடி,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02.**